மகிமை மாட்சிமை நிறைந்தவரை
மகிழ்வுடன் தொழுதிடுவோம்
பரிசுத்த தேவனாம் இயேசுவை
பணிந்தே தொழுகுவோம்

1. உன்னத தேவன் நீரே ஞானம் நிறைந்தவரே
முழங்கால் யாவுமே பாரில் முடங்கிடுதே
உயர்ந்தவரே சிறந்தவரே
என்றும் தொழுதிடுவோம்

2. ஒருவரும் சேரா ஒளியில் வாசம் செய்பவரே
ஒளியினை தந்துமே இதயத்தில் வாசம் செய்யும்
ஒளி நிறைவே அருள் நிறைவே
என்றும் தொழுதிடுவோம்

3. பரிசுத்த தேவன் நீரே பாதம் பணிந்திடுவோம்
கழுவியே நிறுத்தினீரே சத்திய தேவன் நீரே
கனம் மகிமை செலுத்தியே நாம்
என்றும் தொழுதிடுவோம்

4. நித்திய தேவனும் நீரே நீதி நிறைந்தவரே
அடைக்கலமானவரே அன்பு நிறைந்தவரே
நல்லவரே வல்லவரே
என்றும் தொழுதிடுவோம்